DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | சிவா |
| Father's Name | பெருமாள் |
| Village | கொத்தக்கோட்டை |
| Taluk | வாணியம்பாடி |
| Calling | |
| Age | 38 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **09.01.2026**

**O.S. No. 97/2023 வா.சா.1 12.39 PM to 02.05 PM**

**<u>குறுக்கு விசாரணை (1ம் பிரதிவாதி தரப்பில் )–</u>**

1. வழக்கு குறித்த விவரங்கள் அனைத்தும் என்னுடைய வழக்கறிஞருக்கு யார் தெரிவித்தது என்றால் நான் தான் தெரிவித்தேன். சர்வே எண்.403/2 உட்பிரிவு செய்யப்படுவதற்கு முன்பு யாருக்கு பாதிக்கப்பட்டது என்றால் கெம்பண்ணன் அவருடைய பிள்ளைகள் திப்பண்ணன், ராஜேந்திரன் மற்றும் சின்னதம்பி ஆகியோருக்கு சம்மந்தப்பட்டது. மேற்படி நபர்களின் பெயர் குறிப்பிட்டு அனைவருக்கும் சேர்ந்து பாத்தியப்பட்டது என எழுத்துப்பூர்வ ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவர்கள் பெயரில் ஆவணம் எதுவும் இல்லை அதனால் அப்படி ஏதும் தாக்கல் செய்யவில்லை.

2. சர்வே எண்.,403/2ல் 2ஏ1, 2ஏ2, 2ஏ3, 2ஏ4 என நான்கு உட்பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளதா என்றால் தெரியும். மேற்படி கெம்பண்ணன் என்பவர் உயிருடன் இருந்தவரை சர்வே எண் 403/2 ல் உட்பிரிவுகள் எதுவும் செய்யப்படவில்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது.

3. வா.சா.ஆ.1 பதிவு நகலை தான் தாக்கல் செய்து உள்ளேன் அதன் அசல் ஆவணம் யாரிடம் உள்ளது என தெரியுமா என்றால் தெரியும் கிரயம் பெற்ற கோவிந்தசாமி என்பவரிடம் உள்ளது(சாட்சி தற்போது தனக்கு யாரிடம் இருக்கிறது என தெரியவில்லை என பதில் அளிக்கிறார்.)

4. மேற்படி கோவிந்தசாமி உயிருடன் உள்ளாரா என்றால் இருக்கிறார். வா.சா.ஆ.1 நான் படித்துப் பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். அதில் கோவிந்தசாமி சர்வே எண்.,403/2ல் 2ஏ1, 2ஏ2, 2ஏ3 ஆகியவற்றில் உள்ள நிலங்கள் கிரயம் பெற்றார் என்று சொன்னால் சரிதான்.

5. சாட்சியிடம் வா.சா.ஆ.1 காண்பிக்கப்பட்டது சர்வே எண்.,403/2 2ஏ3 –ல் எவ்வளவு விஸ்தீரணம் சொத்து கிரையம் வாங்கியுள்ளது என்றால் 72 சென்ட் ஆகும். மேற்படி 72 சென்டை கோவிந்தசாமி யாருக்கு விற்றார் என்றால் முனிசாமி , குமரேசன் மற்றும் எனக்கு கிரையம் செய்தார்.

6. வா.சா.ஆ.2 ல் உள்ள சர்வே எண்.403/2ஏ3 யில் 28 சென்ட் நிலம் குமரேசன் என்பவர் வேறு சொத்துகளுடன் சேர்த்து கோவிந்தசாமி என்பவரிடம் இருந்து சேர்த்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

7. வா.சா.ஆ.3 ல் உள்ள சர்வே எண்.403/2ஏ3 யில் 44 சென்டை முனிசாமி என்பவர் வேறு சொத்துகளுடன் சேர்த்து மேற்படி கோவிந்தசாமி என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

8. மேற்படி கெம்பண்ணன் வகையாவிடம் இருந்து கோவிந்தசாமி கிரையம் வாங்கிய மேற்கண்ட 72 சென்ட் நிலம் முழுவதும் மேற்படி குமரேசன் மற்றும்

முனுசாமி மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் மூலம் கிரயம் பெற்றார்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி முதலாக குமரேசன் என்பவர் பெயரில் ஆவண எண். 666/2005 ஆகவும், பின்பு முனிசாமி பெயரில் ஆவண எண். 667/2005 ஆக பதிவாகி உள்ளது என்றால் சரிதான்.

9. மேற்படி கோவிந்தசாமியிடம் அந்த சர்வே எண் 403/2ஏ3 யில் தற்போது வேறு எந்த சொத்துக்களும் மீதம் இல்லை என்று சொன்னால் சரிதான், ஆனால் எக்டேர் கணக்கில் 0.925 இருந்து சென்ட் ஆக மாற்றம் செய்து கணக்கிடும்போது 72 –3/4 சென்ட் என வருகிறது அந்த ¾ சென்ட் இது குறித்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என சாட்சி பதில் அளிக்கிறார். மேற்படி நான் குறிப்பிடும் ¾ சென்ட் ஆனது எந்த சர்வே எண்ணில் இருக்கிறது என்றால் சர்வே எண் 403/2ஏ3 ல் உள்ளது.

10. மேற்படி நான் குறிப்பிடும் ¾ சென்ட் கோவிந்தசாமி என்பவரிடம் இருந்ததில்லை என்றாலும் ஏற்கனவே கெம்பண்ணன் கவுண்டர் வகையறா இடம் இருந்து பெற்ற நிலத்தை கோவிந்தசாமி பின்பு குமரேசன் மற்றும் முனுசாமி ஆகியோர்களுக்கு முழுமையாக 72 சென்ட் நிலத்தையும் கிரயம் செய்து விட்டார் என்றாலும் மீதம் நான் குறிப்பிடும் எந்த ஒரு நிலமும் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல, பத்திரத்தில் இல்லை சிட்டாவில் இருப்பதை வைத்து நான் கூறுகிறேன்.

11. நான் குறிப்பிடும் ¾ சென்ட் நிலமானது கோவிந்தசாமி முன்பு கிரயம் பெற்ற 72 சென்ட் நிலத்தில் உட்பட்டது அல்ல என்றாலும் அவ்வாறு நான் குறிப்பிடும் போன்று ¾ சென்ட் நிலம் ஏதேனும் இருந்தால் அது கெம்பெண்ணன் வகையறாவிற்கு பாதிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல, சர்வே எண்.403/2ஏ3 ல் 72 – ¾ சென்ட் நிலம் வருகிறது தட்டச்சு பிழையால் பத்திரத்தில் அது சரியாக குறிப்பிடபடவில்லை.

12. நான் கெம்பண்ணன் வகையறாவிடம் இருந்து கிரயம் பெற்று பத்திரம் எதுவும் நான் பதிவு செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான். எனவே மேற்படி கோவிந்தசாமி என்பவரிடமிருந்து நான் கிரயம் பெற்ற வா.சா.ஆ.4 செல்லாது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி முனுசாமி மற்றும் குமரேசன் ஆகியோர்களுக்கு கிரயம் கொடுக்கப்பட்ட பத்திரங்கள்தான் முந்தைய தேதி விட்டது என்றாலும் என்னுடைய பத்திரமானது பிந்தய தேதியிட்டது என்றாலும் அதனால் எனக்கு ஏற்படுத்திப் பட்ட கிரைய பத்திரம் செல்லாது என்று சொன்னால் சரியல்ல.

13. கெம்பண்ணன் வகையறாவிடம் இருந்து சர்வே எண்.403/2ஏ4 ஐ யாரிடம் இருந்து யார் வாங்கினார் என்றால் அது பற்றி எனக்கு தற்போது சரியாக நினைவில்லை. சர்வே எண்.403/2ஏ4 யாருடைய சொத்து என்றால் சாட்சி அதற்கு என்னுடைய அப்பா பெருமாள் என்பவரின் சொத்து என பதில் கூறுகிறார். எனது அப்பா எப்போது யாரிடம் கிரையம் வாங்கினார் என்றால் எனக்கு தற்போது சரியாக நினைவில்லை. எனது அப்பா தற்போது உயிருடன் இருக்கிறாரா என்றால் இருக்கிறார்.

14. என்னுடைய தகப்பனாரின் சொத்து சர்வே எண்.403/2ஏ4 தற்போது என்னுடைய அனுபவித்தில் உள்ளதா என்றால் சரிதான். சர்வே எண். 403/2ஏ3யும், 403/2ஏ4 ம் பக்கத்தில் ஒட்டி உள்ளதா என்றால் சரிதான்.

15. சர்வே எண்.403/2ஏ4 நிலத்தில் கிணறு உள்ளதா என்றால் சரிதான். அந்த கிணறு தற்போது யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் எனது மற்றும் அப்பாவின் அனுபவத்தில் உள்ளது, சாட்சி தனக்கு கிரையம் ஆனதில் இருந்து 2 பேரின் அனுபவித்தில் உள்ளது என பதில் கூறுகிறார். சர்வே எண்.403/2ஏ4 ல் உள்ள கிணறானது கிரையம் பெறும் போதே அந்த கிணறு இருந்ததா அல்லது எனது அப்பா கிரயம் வாங்கிய பிறகு வெட்டப்பட்டது என்றால் எனக்கு சரியாக நினைவில்லை.

16. சர்வே எண்.403/2ஏ4 என்ற சொத்தில் உள்ள கிணறு வேறு சர்வே எண்.403/2ஏ3 ல் உள்ள கிணறு வேறு என்று சொன்னால் என்றால் இல்லை ஒரே கிணறு தான் அதற்கு சம்மந்தப்பட்ட இடத்தை தான் நாங்கள் வாங்கினோம்.

17. வா.சா.ஆ.4ல் ¾ சென்ட் இடத்தில் உள்ள கிணறும், வழக்கு சர்வே எண். 403/2ஏ3யில் சொல்லப்பட்ட கிணறும் ஒரே கிணறு என வழக்குரையில் தெரிவித்திருக்கிறேனா என்றால் சாட்சி வெகு நேரம் யோசித்துவிட்டு நேரடியாக பதில் கூறாமல் கிணற்றை சுற்றி எங்களுடைய நிலம் இருக்கிறது என்றும் வெகு நாட்களாக பயன்படுத்தி வருகிறோம் என கூறுகிறார்.

18. சர்வே எண்.403/2ஏ4 சம்பந்தப்பட்ட என்னுடைய தகப்பனாரின் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை நிலவரம் தெரிய வந்துவிடும் என்பதால் தான் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரி அல்ல வேண்டுமென்றால் நாங்கள் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறோம் .

19. வா.சா.ஆ.4 ல் ¾ சென்ட் நிலத்தின் நீள அகல விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை ¾ சென்ட் என மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.5 ஆனது மேற்படி குமரேசன் மற்றும் முனுசாமி ஆகியோர்கள் வழக்கின் ஒன்றாம் பிரதிவாதிக்கு சர்வே எண்.403/2ஏ3 கிரயம் செய்த ஆவணம் என்றால் சரிதான். அதில் மொத்தம் 22 சென்ட் நிலமும் வழக்கின் ஒன்றாம் பிரதிவாதி வன்னியப்பன் என்பவருக்கு கிரயம் கொடுத்து விட்டார்கள் என்றால் சரிதான்.

20. வா.சா.ஆ.5 காண்பிக்கப்பட்டு கேள்வி கேட்கப்படுகிறது, அந்த கிரைய பத்திரத்திலும் 9ஆம் பக்கத்தில் சொத்து விவரத்தில் வழக்கு சொத்தான ¾ சென்ட் நிலம் குறித்து செக் பந்து விவரத்தில் எதுவும் சொல்லப்படவில்லை

என்று சொன்னால் சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு பதில் கூறாமல் தயக்கத்துடன் நிற்கிறார்.

21. வா.சா.ஆ.4 ஆவணமானது நானும் கோவிந்தசாமி என்பவரும் இணைந்து மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணத்திற்கு சம்பந்தப்பட்ட சொத்தானது கோவிந்தசாமிக்கு பார்த்ததே இல்லை என்றாலும் அவர் ஏற்கனவே முனுசாமி மற்றும் குமரேசன் ஆகியோருக்கு கிரயம் செய்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல.

22. வழக்கு சொத்து குறித்து நான் கெம்பண்ணன் வகையறவிடமிருந்து எந்த ஒரு கிரயமும் பெறாததால் எனக்கு எந்த ஒரு உரிமையும் வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.403/2ஏ3 ல் சம்பந்தப்பட்ட வருவாய் துறை ஆவணங்கள் அனைத்தும் ஒன்றாம் பிரதிவாதி வன்னியப்பன் பெயர்தான் வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் என்றால் சரிதான், ஆனால் அது எங்களுக்கும் உரிமை உள்ளது.

23. சர்வே எண்.403/2ஏ3 சம்மந்தப்பட்ட பட்டா வன்னியப்பன் பெயரில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல, எங்கள் பெயரில் பட்டா உள்ளது. மேற்படி எப்போது பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றுசொன்னால் தற்போது நினைவில்லை ஆவணத்தை பார்த்து தான் கூற முடியும் தாக்கல் செய்யவும் தயாராக இருக்கிறேன்.

24. சாட்சியிடம் தற்போது வா.சா.ஆ.6 காண்பிக்கப்பட்டு கேள்வி கேட்கப்படுகிறது , அந்தக் கணினி சிட்டாவில் என்னுடைய பெயர் எப்பொழுது சேர்க்கப்பட்டது என்றால் சரியாக எனக்கு நினைவில்லை. வழக்கு சர்வே எண் சம்பந்தப்பட்ட பட்டா எண்.1117 ஒன்றாம் பிரதிவாதி கிரயம் பெற்ற தேதியிலிருந்து அவர் பெயரில் தான் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான், சாட்சியிடம் பட்டா எண்.1117 ன் கணினி பதிவிறக்கம்

காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டதன் பேரில் **(மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

25. வா.சா.ஆ.7 ல் எதற்காக அந்த மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் எங்களுடைய பெயரில் உள்ள ஆவணம் ரத்து செய்யப்பட போகிறது என தெரிவிக்கப்பட்டதற்கு எதிராக மேல்முறையீடு செய்தோம் அந்த மனு தான் அது. 25.04.2022 தேதியிட்ட மாவட்ட பதிவாளர் பிறப்பித்த உத்தரவினை இந்த நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு சரியாக தெரியவில்லை வக்கீலிடம் தான் கேட்க வேண்டும்.

26. வா.சா.ஆ.7 ல் அதில் கண்டுள்ள மனு விபரம் யார் தயார் செய்தார்கள் என்றால் நான் தான் தயார் செய்தேன். எங்கள் பெயரில் உள்ள கிரய ஆவணம் ரத்து செய்யப்பட்டதை எதிர்த்து தான் மேல்முறையீடு செய்திருக்கிறோம் என்றாலும் அதை மறைக்கத்தான் நான் தற்போது தெரியவில்லை என சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

27. சாட்சியிடம் தமிழ்நாடு அரசு பதிவு துறை வழங்கிய சர்வே எண்.403/2ஏ3 சொத்து தொடர்பான வில்லங்க சான்று காண்பிக்கப்பட்டு அதில் ஆவண எண்.668/2005 ஆவணம் குறித்து வேலூர் மாவட்ட பதிவாளர் அவர்களில் செயல்முறை மூலம் மேற்படி ஆவணத்தை அடிப்படையாக கொண்டு தொடர் ஆவணங்கள் பதிவிட்டு தாக்கல்செய்யப்பட்டால் பதிவிற்கு ஏற்கவேண்டாம் என ஆணையிடப்படுகிறது என குறிப்பு உள்ளதா என்றால் சரிதான். **(மேற்படி சர்வே எண்.403/2ஏ3 சொத்து தொடர்பான வில்லங்க சான்று பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

28. நான் தவறான ஆவணங்கள் அடிப்படையில் ஒன்றாம் பிரதிவாதியின் பெயரில் உள்ள வருவாய் துறை ஆவணத்தில் அதிகாரங்களை தவறாக பயன்படுத்தி கூட்டு பட்டாவாக நான் சேர்த்துக் கொண்டேன் என்று

சொன்னால் சரியல்ல. நான் ஒன்றாம் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டுமென முயற்சித்து தான் கூட்டு பட்டாவாக சேர்த்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

29. ஒன்றாம் பிரதிவாதியின் சொத்தை என்னுடைய தந்தையின் சொத்துடன் சேர்த்து உட்பிரிவு செய்து பதிவு செய்ய முற்பட்டதால் தான் அவ்வாறு செய்யக்கூடாது என தான் ஒன்றாம் பிரதிவாதி தடுத்து நிறுத்தினார் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய பெயரில் உள்ள பத்திரமானது முறைகேடான பத்திரம் என்றாலும் அது உண்மையான பத்திரம் இல்லை என்றாலும் சரியல்ல. என்னுடைய ஆவணம் கொண்டு பிரதிவாதியின் பெயரில் உள்ள வருவாய் துறை ஆவணத்தில் கூட்டு பட்டாக இணைத்ததற்கு பிரதிவாதிக்கு எவ்வித அறிவிப்பும் அனுப்பப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆகையால் கூட்டு பட்டாவில் என்னுடைய பெயரை இணைத்ததே தவறு என்று சொன்னால் சரியல்ல.

30. என் பெயரில் கூட்டு பட்டா எண். 4292 ல் என்னுடைய பெயரை நீக்க கோரி ஒன்றாம் பிரதிவாதி கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலரிடம் முறையிட்டு இருக்கிறார் என்று சொன்னால் அவர் அவ்வாறு மனு செய்தது விவரம் எனக்கு தெரியும். மேற்படி மனு சம்பந்தமாக எனக்கும் ஒன்றாம் பிரதிவாதிக்கும் இடையே ஊர் பெரியோர்கள் முன்னிலையில் சமரசம் பேசப்பட்டதா என்று சொன்னால் பிரதிவாதி தரப்பில் என்னை அழைத்தார்கள். நான் கூறுவது தவறு என்று சொன்னாலும் நான் தான் சமரசம் பேச பிரதிவாதியை அழைத்து சமரசம் பேசியதன் பெயரில் பிரதிவாதி மேற்படி மனுவை வாபஸ் பெற்றுக் கொண்டார் என்று சொன்னால் சரியல்ல, அவர்கள் தான் என்னிடம் வந்து பேசி சமாதானமாக சென்று கொள்ளலாம் வாபஸ் பெற்றுக் கொள்கிறோம் எனக் கூறினார்கள்.

31. நான் உரிமை இல்லாத நபரிடம் கிரயம் பெற்றதன் அடிப்படையில் வருவாய் அதிகாரிகளை தவறாக பயன்படுத்தி கூட்டு பட்டாவில் என்னுடைய பெயரை இணைத்ததன் அடிப்படையிலும் வா.சா.ஆ.4 ஆனது ஒரு தவறான ஆவணம் என்ற அடிப்படையிலும் இந்த வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்க தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

ESHWAR VISWANATHAN

Digitally signed by ESHWAR VISWANATHAN
Date: 2026.01.24 15:06:39 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாணியம்பாடி.